# ஸ்ரீ குறிஞ்சி வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி

## அழகப்பசமுத்திரம்

## காலாண்டு பொதுத்தேர்வு - 2024

## பதினொன்றாம் வகுப்பு - தமிழ்

மதிப்பெண்கள்: 90

நேரம்: 3:00 மணி

பதிவு எண்:

பகுதி - I (மதிப்பெண்கள்:14) 14 X 1 = 14

**குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**
**ii)கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.**

1. பாயிரம் இல்லது ________ அன்றே.

அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை

2. கலைகளின் உச்சம் எது?

அ) கவிதை ஆ) இசை இ) சிற்பம் ஈ) நடனம்

3. மண்ணுக்கு வளம் சேர்ப்பன ________

அ) மண்புழு ஆ) ஊடுபயிர் இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்

4. தகப்பன்கொடி புதினத்திற்காக 2003 ஆம் ஆண்டில் தமிழக அரசின் விருது பெற்றவர் யார்?

அ) வில்வரத்தினம் ஆ) அழகிய பெரியவன் இ) ஜெயமோகன் ஈ) பெரியவன் கவிராயர்

5. "வான் பொய்த்தது" - என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப்பொருள்

அ) வானம் இடிந்தது ஆ) மழை பெய்யவில்லை

இ) மின்னல் வெட்டியது ஈ) வானம் என்பது பொய்யானது.

6. முதனிலை என வழங்கப்படும் பகுபத உறுப்பு எது?

அ) பகுதி ஆ) விகுதி இ) இடைநிலை ஈ) சந்தி

7. காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?

அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்

8. பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க.

அ) அ. முத்துலிங்கம் - யுகத்தின் பாடல்

ஆ) பவணந்தி முனிவர் - நன்னூல்

இ) சு. வில்வரத்தினம் - ஆறாம் திணை

ஈ) இந்திரன் - பேச்சுமொழியும் கவிதை மொழியும்.

(i) அ, ஆ (ii) அ, ஈ (iii) ஆ, ஈ (iv) அ, இ

9. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

1) வெள்ளிவீதியார் - அ) புறநானூறு

2) அண்ணாமலையார் - ஆ) சி.சு.செல்லப்பா

3) வாடிவாசல் - இ) குறுந்தொகை

4) இளம்பெருவழுதி - ஈ) காவடிச்சிந்து

(i) அ ஆ இ ஈ (ii) ஆ ஈ அ இ (iii) இ ஈ ஆ அ (iv) இ ஈ அ ஆ

Prepared By: S.Sakthivel M.A.,B.Ed.,M.Phil.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

10. தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு. - இக்குறட்பாவில் பயின்று வரும் அணி.
அ) வேற்றுமை அணி ஆ)உருவக அணி இ)உவமை அணி ஈ)பின்வரு நிலை அணி
11. 9 அடி சிற்றெல்லையும் 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல்
அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு
12. பிள்ளைக்கூடம் - என்னும் கவிதையின் ஆசிரியர் யார்?
அ) போதனார் ஆ) தொல்காப்பியர் இ) பாரதியார் ஈ) இரா.மீனாட்சி
13. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாதது எது?
அ) தலைமை துவிபாஷி ஆ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை
இ) மொழிபெயர்ப்பாளர் ஈ) இந்தியாவின் பெப்பிசு
14. "செங்கயல்" என்ற சொல்லின் இலக்கண குறிப்பு தருக.
அ) எண்ணும்மை ஆ) உருவகம் இ) வினைத்தொகை ஈ) பண்புத்தொகை

## பகுதி - II (மதிப்பெண்கள்:24)

### பிரிவு-1

**எவையேனும் மூன்றனுக்கு வினாக்களுக்கு விடையளிக்க.** **3 X 2 = 6**

15. "பாயிரம்" பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது?
16. சீர்தூக்கி ஆராயவேண்டிய ஆற்றல்கள் யாவை?
17. காவடிச்சிந்து என்பது யாது?
18. மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.

### பிரிவு -2

**எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க.** **2 X 2 = 4**

19. தமிழ்நாட்டின் மாநிலமரம் - சிறு குறிப்பு வரைக
20. "கோட்டை" என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?
21. காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது?

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7 X 2 =14**

22. கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்த வாழ்ந்து நாடு வந்தனர் - **தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு தொடர்கள் அமைக்க**.
23. **ஏதேனும் ஒன்றுக்குப் புணர்ச்சி விதி தருக.**
அ) திருப்புகழ் ஆ) பூங்கொடி
24. **ஏதேனும் ஒன்றுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக**.
அ) ஈன்ற ஆ)மெலிந்து
25. பின்வரும் மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
அ) கணை கனை ஆ) குறை குரை
26. **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடர் அமைக்க.**
அ) வைகை ஆ) தங்கை
27. நிலையின் திரியாது ____ தோற்றம்
மலையினும் ____ பெரிது.
28. **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக**.
அ)அனைத்துத் துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெற வேண்டும்.
ஆ) சான்றோர் மிகுந்தப் பொறுப்புடன் சேவைப் புரிந்து கொள்கையை நிலை நாட்ட செய்தனர்.
29. **பிறமொழிச் சொற்களைத் தமிழ்படுத்துக**. அ) போலீஸ் ஆ) சந்தோஷம்
30. **கலைச்சொற்கள் தருக.** அ) Classical language ஆ) Value Education

**Prepared By: S.Sakthivel M.A.,B.Ed.,M.Phil.**



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**பகுதி - III (மதிப்பெண்கள்:28)**

**பிரிவு-1**

**எவையேனும் இரண்டனுக்கு வினாக்களுக்கு விடையளிக்க.** **2 X 4 = 8**
**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.**

31. சு.வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?
32. காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது? ஏன்?
33. புகழுக்குரிய பண்புகளாக நீவிர் கருதுவன யாவை? புகழின் பெருமையைப் பொதுமறைவழி நின்று கூறுக.
34. "ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்" - இடஞ் சுட்டிப் பொருள் விளக்குக.

**பிரிவு-2**

**எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க.** **2 X 4 = 8**

35. ஐங்குறுநூற்றுப் பாடல் சுட்டும் திணை, முதற்பொருள், கருப்பொருள்களை அட்டவணைப்படுத்துக
36. 'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' - என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.
37. சமணப் பள்ளிகளும் பெண்கல்வியும் - குறிப்பு வரைக.
38. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக.

**பிரிவு-3**

**எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்க.** **3 X 4 = 12**

39. சொற்பொருள் பின்வருநிலையணியை விளக்கிக் கீழ்க்காணும் குறளுக்கு இவ்வணியைப் பொருத்தி எழுதுக.
    வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
    துணைவலியும் தூக்கிச் செயல்.
40. **இலக்கிய நயம் பாராட்டுக.**
    மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக.


    பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
    பேணி வளர்த்திடும் ஈசன்;
    மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல
    மாதர் அறிவைக் கெடுத்தார்.
    கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி
    காட்சி கெடுத்திடலாமோ?
    பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
    பேதமை யற்றிடும் காணீர் - பாரதியார்.

41. 'பேசு' என்ற வேர்ச்சொல்லை வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம், வினையாலணையும் பெயராக மாற்றி தொடரில் அமைக்க.
42. **தமிழாக்கம் தருக.**
    1. The Pen is mightier than the Sword.
    2. A picture is worth a thousand words.
    3. Winners don't do different things, they do things differently.
    4. Work while you work and play while you play.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

43. கருத்தை புரிந்து கொண்டு பத்தியாக எழுதுக.




**பகுதி - IV (மதிப்பெண்கள்:18)**

**அனைத்து வினாக்களுக்கும் இருபக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்க. 3 X 6 = 18**

44. திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க.

**(அல்லது)**

நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க .

45. 'அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்' - இக்கூற்றை முப்பால்வழி விளக்குக.

**(அல்லது)**

பௌத்தக் கல்வி, சமணக் கல்வி, மரபுவழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.

46. வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.

**(அல்லது)**

பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?

**பகுதி - V (மதிப்பெண்கள்:6)**

**அடிபிறழாமல் எழுதுக. 4 + 2 = 6**

47. அ) 'ஏடு தொடக்கி' - எனத் தொடங்கும் யுகத்தின் பாடலை எழுதுக.

ஆ) 'பட்டு' - என முடியும் குறளை எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com